**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

| எம்.சி.ஓ.பி.எண் | **107 /2022** | ம.சா | **1** |
|---|---|---|---|
| **பெயர்** | **M. நவீன்** | **வயது** | |
| **த/பெ** | | **மாவட்டம்** | |
| **தொழில்** | | **ஊர்** | |

The Oaths Act 1969, Act No.44/1969-ன் விதிமுறைகளின் படி 02.01.2025 நாளாகிய இன்று Tmt.G.Kalaivani.,B.A.B.L., சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் மனுவின் மனுதாரர் எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனது தகவலின் பெயரில் தயார் செய்யப்பட்டது. எனது மனுவிற்கு ஆதரவாக கீழ் கண்ட ஆவணங்களை முன்னிலைப்படுத்தியுள்ளேன்.

| **சான்றாவணம்** | **தேதி** | **சான்றாவணப்பட்டியல்** |
|---|---|---|
| ம.த.சா.ஆ.1 | | FIR Xerox copy |
| ம.த.சா.ஆ.2 | | Accident Register (Ganga Hospital ) online copy |
| ம.த.சா.ஆ.3 | | Insurance policy of JCB vehicle xerox |
| ம.த.சா.ஆ.4 | | MVI Report JCB vehicle xerox copy |
| ம.த.சா.ஆ.5 | | Medical and Hospital bills Rs. 4,14,136 Original ( Serial No. 01 to 08) 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சபணை செய்யப்பட்டது. |
| ம.த.சா.ஆ.6 | | Aadhar card of petitioner xerox copy (அசல் உடன் ஒப்பீடுசெய்யப்பட்டது.) |
| ம.த.சா.ஆ.7 | | Bank pass Book of petitioner xerox copy (அசல் உடன் ஒப்பீடுசெய்யப்பட்டது.) |
| ம.த.சா.ஆ.8 | | Discharge summary Original |
| ம.த.சா.ஆ.9 | | நான் B.Sc அரசு கல்லூரியில் படித்தற்கான அடையாள அட்டை ஜெராக்ஸ் |
| ம.த.சா.ஆ.10 | | மருத்துவ பில்கள் ரூ. 1,24935.68 அசல் (81 முதல் 123 வரை) |

| | | |
|---|---|---|
| | | 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சபணை செய்யப்பட்டது. |
| ம.த.சா.ஆ.11 | | pan card xerox (அசல் உடன் ஒப்பீடுசெய்யப்பட்டது.) |
| ம.த.சா.ஆ.12 | | Accident Register of G.H Pochampalli Xerox |
| ம.த.சா.ஆ.13 | | Wound certificate of Ganga Hospitial Xerox |
| ம.த.சா.ஆ.14 | | 12th T.C Xerox (அசல் உடன் ஒப்பீடுசெய்யப்பட்டது.) |

**2-**ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**:**

இந்த வழக்கு தாக்கல் செய்யும்போதே மருத்துவ பில்கள் என் வசம் இருந்தது என்றால் சரிதான். எந்தெந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்ற முழு விவரத்தையும் வழக்கு தாக்கல் செய்யும்போது எனது வழக்கறிஞர் இடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். நான் அரூர் கவன் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்ற விவரத்தை எனது மனுவிலும் பிரமாண பத்திரத்திலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனவே 119 இருந்து 121 வரையிலான பில்கள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாதவை என்பதால் அது சொல்லப்பட்டுள்ள மருத்துவ செலவு தொகை பெறயியலாது என்று சொன்னால் சரியல்ல. வரிசை எண் 122-ல் எனது பெயர் குறிப்பிடப்படாததால் மருத்துவ செலவு தொகை பெறயியலாது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த சமையத்தில் எனது வயது 21 ஆகும். ம.சா.ஆ. 14 எனது பிறந்த வருடம் 2002 என உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த 2022 ஆகும். அதன்படி எனது வயது 20 என்றால் சரிதான். 21 வயது என்பது தவறு என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி அன்று எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் ஓட்டிய இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது அல்ல என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு விலைக்கு வாங்கி கொடுத்தார். அனால் R.C எனது பெயரிலோ எனது அப்பா பெயரிலோ இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் அனுமதி பெயரில்தான் சம்பவத்தன்று வண்டியை ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். எனக்கு லைசன்ஸ் இல்லை என்று தெரிந்தும் எனது அப்பா என்னை வாகனம் ஓட்ட அனுமதித்தார் என்றால் சரிதான். வண்டி யாருக்கு சொந்தம் என்ற விவரத்தை எனது மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து தேதியில் வண்டிக்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். வண்டியின் உரிமையாளர் மற்றும் எனது அப்பா ஆகிய இருவரும் இந்த வழக்கின் அவசிய தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல. காப்பீடு இல்லாத வண்டியை ஓட்டுனர் உரிமம் இல்லாமல் இயக்குவது சட்டப்படி தவறு என எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எனக்கு எதாவது இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் கூட அதை எனது தகப்பனாரும் நான் ஓட்டி சென்ற வண்டியின் உரிமையாளரும், JCB வாகனத்தின் உரிமையாளரும் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நானும் ஆகாஷ் விபத்து சமயத்தில் எல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல அணிந்திருந்தோம். எல்மெட் அணிந்திருந்த சங்கதியை எனது மனுவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ தெரிவிக்காமல் தற்போது தான் முதல் முதலாக

தெரிவிக்கிறேன் என்றால் சரிதான். நான் வண்டியை ஓட்ட ஆகாஷ் பின்னால் அமர்ந்திருந்தார். ஒலைப்பட்டி கூட்டுரோடு அருகில் பிரிவு ரோட்டில் வந்த J.C.B மோதி விபத்து ஏற்பட்டது. J.C.B வாகனம் ஒலைப்பட்டி பேப்பர் கம்பெனியில் இருந்து வேளியே வந்து விபத்து ஏற்பட்டது. விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பதை எனது அப்பாவிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். எனது அப்பா மனோகரன் தான் கல்லாவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அவர் கொடுத்த புகாரில் பேப்பர் மில்லுக்கு முன்பு எதிரில் வந்த J.C.B மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியிருந்தார் என்றால் சரிதான். இருசக்கர வாகணத்தில் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை ஒப்படைத்தால் இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லாத விவரம், எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாத விவரம், நேருக்குநேர் மோதி எனது வாகனத்திற்கு முன்பகுதியில் சேதம் ஏற்ப்பட்ட விவரம் தெரிந்துவிடும் என்பதால் அதை வேண்டும் என்றே ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. J.C.B வாகனம் அதிவேகத்தில் செல்லயியலாது என்றும் நான் தான் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் சாலையில் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை இயக்கி சாலை விதியை பின்பற்றாமல் விபத்து ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அதிவேகத்தாலும், கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டதால் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க இல்லை என்றால் சரியல்ல. J.C.B வாகனம் வணிகரீதியாக வாகனம் என்றால் தெரியாது. J.C.B ஓட்டுனருக்கும் அந்த வாகனத்தை இயக்கும் பேட்ச் இல்லை என்றால் அது பற்றி தெரியாது. எனது பெயரில் விவசாய நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான். இழப்பீடு அதிகம் பெறுவதற்ககா விவசாய வருமாணம் வருவதாக அதிகப்படியா தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மருத்துவ பில்கள் சிலவற்றில் Dispenced என குறிப்பிடப்பட்டுள்ளதால் அவை ஏற்கனவே கழிக்கப்பட்ட தொகைகள் என்பதால் கோர இயலாது என்றால் சரியல்ல. இரண்டு ஓட்டுனர்களும் சாலை விதியையும், காப்பீட்டு விதியையும் மீரியதால் இரண்டாம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2-ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளும் படி 1-ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர்ரால் தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை**:** இல்லை

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,
ஊத்தங்கரை.